**ஒசத்தியாநவெ** (high class); **ஒசத்தி இல்லாதவெ** (non-class)

பழமையான தமிழ் இலக்கணமான தொல்காப்பியம் சொற்களை உயர்திணை, அஃறிணை என்று இருவகையாகப் பிரிக்கிறது. அதாவது தமிழிலுள்ள சொற்கள் ஒன்று உயர்திணையைச் சேர்ந்தனவாக இருக்கும்; இல்லை என்றால் அஃறிணையைச் சேர்ந்தனவாக இருக்கும்.

இதே போன்று படகுமொழியில் உள்ள சொற்கள் எல்லாம் ஒசத்தியாநவெ (உயர்திணை), ஒசத்தி இல்லாதவெ (அஃறிணை) என்று இரு பிரிவுபடுகின்றன.

பகுத்தறிவு உள்ள உயிரினங்களைக் குறிக்கும் சொற்கள் ஒசத்தியாநவெ (உயர்திணை); அதாவது மனிதர்களைக் குறிக்கும் சொற்கள் உயர்திணை.

எ-டு: 0கவுட, ஜோகி, அய்ய, ராஜ, எம்மாத்தி, மிச்சி முதலியன

பகுத்தறிவில்லாத உயிரினங்களையும் உயிரற்ற பொருட்களையும் வகைப்படுத்தும் சொல் ஒசத்தி இல்லாதவெ (அஃறிணை).

எ-டு: மொரா, கல்லு, 0தந, எலெ, 0கிடு முதலியன

உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவர் அல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே
-தொல்காப்பியம் சொல்லதிகாரம்-1

Those denoting human beings are called high class
All others are called non-class
These are two class the words denote
-English translation: Dr.S.Ilakkuvanar

BADAGA DOCUMENTATION CENTER